“ විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා අප කැපවෙමු ”
ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත
பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE
204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.
ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary
දුරකථන / தொலைபேசி / Telephone - 011 - 2092599
ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011 - 2092601
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - chiefsecretary@wpc.gov.lk
පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone - 011 - 2093000

SLSI ISO 9001 SYSTEM CERTIFIED
SLAB ACCREDITED ISO/IEC: 17021 QMS-001-01

| මගේ අංකය / எனது இலக்கம் / My No. | CSWP/ADM/18-38/FI/01-2019 | ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No. | | දිනය / திகதி / Date | 2019/03/06 |
|---|---|---|---|---|---|

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 21/2018, 24/2018, 31/2001(XIV), 27/2018 மற்றும் 19/2019 அரச நிர்வாக சுற்றறிக்கைக் கடிதம் 02/2018 ஆகியவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/02/2019 மற்றும் 2019.02.13 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/2018, 2018-09-28 | இலங்கை பொறியில் சேவையின் III ஆம் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களை இரண்டாம் மொழித்தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைவதிலிருந்து விடுவித்தல் |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 24/2018, 2018-09-07 | சம்பளம் பொருள்கொள்ளல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 31/2001 (XIV), 2018-12-14 | தாபனக் கோவை பகுதி II இன் XLVIII அத்தியாயத்தின் 19.5 ஆம் உபபிரிவின் கீழ் ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களது பெயர்ப்பட்டியல் |
| 04. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 27/2018, 2018-12-31 | தாபனக் கோவையின் XII அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவினை திருத்துதல் |
| 05. | அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 02/2018, 2018-11-28 | களப்பதவி வகைக்குரிய அரச மற்றும் மாகாண அரச சேவை பதவிகள் |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),
பிரதான செயலாளருக்காக (மே.மா.)

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 27/2018

எனது இல:EST-6/03/LEA/3160
பொது நிருவாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.12.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## தாபன விதிக்கோவையின் XII அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவினைத் திருத்தியமைத்தல்

தாபன விதிக் கோவையின் XII அத்தியாயத்தின் 16 பிரிவு தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அப் பிரிவின் 16:2 மற்றும் 16:2:1 ஆகிய உப பிரிவுகளைப் பின்வருமாறு திருத்தியமைப்பதற்கும் 16:2:2 இலிருந்து 16:2:4 வரையான புதிய உப்பிரிவுகளை உள்ளடக்குவதற்கும், 2018.08.28 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

16:2 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வழமையான பாடநெறி ஒன்றைத் தொடர்வது தொடர்பாக திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்களுக்கு கீழ்ப்பட்டு அரச அலுவலரொருவருக்கு வெளிநாட்டுக் கற்கை தொடர்பாக சம்பளமற்ற விடுமுறை வழங்க முடியும்.

16:2:1 நன்னடத்தைக் காலத்தில் உள்ள அலுவலரொருவரின் நன்னடத்தைக்காலம் வெளிநாட்டு கற்கைக்காக செலவிடப்படும் காலத்திற்குச் சமமான கால எல்லையினால் நீடித்தல்.

16:2:2 கற்கையைத் தொடருகின்ற அலுவலரது வாழ்க்கைத் துணைவரும் அரச சேவையிலுள்ள ஒருவராயின், வாழ்க்கைத்துணைக்கு இதன் 16:1:9 மற்றும் 16:1:10 உப பிரிவுகளுக்கு கீழ்ப்பட்டு சம்பளமற்ற விடுமுறை வழங்குதல்.

16:2:3 இதன் கீழ் கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்ளும் அலுவலரொருவர் இதன் 16:15 உப பிரிவுக்கமைய விதிக்கப்படும் கட்டாய சேவைக் காலத்தில் விடுமுறைக்கான சிபார்சு வழங்கப்படும் திணைக்களத் தலைவரினால் விதிக்கப்படும் காலப்பகுதியில் அத் திணைக்களத்தில் சேவையாற்றி பூரணப்படுத்தல் வேண்டும். எனினும், இந் நிபந்தனை அரச சேவையின் இன்னுமொரு சேவைக்கு விடுவிப்பதற்காக செய்யப்படும் வேண்டுகோளை நிராகரிப்பது தொடர்பாக ஏற்புடையதாக கொள்ளலாகாது.

16:2:4 வெளிநாட்டு கற்கை தொடர்பாக சம்பளமற்ற விடுமுறையினை வழங்குதல் தொடர்பில் 16 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட ஏனைய சகல நிபந்தனைகளும் 16:2 ஆம் உட் பிரிவின் கீழ் விடுமுறையினை வழங்கும் போது பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

ஒப்பம்./ ஜே. ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு